# இடைக்காட்டுச் சித்தரின் வாழ்வியல் தத்துவங்கள்

62

ர. மரகதம் [1] & முனைவர் ச.பிரியதர்சினி [2]

[1]முதுகலை முதலாமாண்டு தமிழ், [2]இணைப்பேராசிரியர்,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641043

மின்னஞ்சல் – ravikumarr0548@gmail.com & priyadharshini_tam@avinuty.ac.in

**ஆய்வு சுருக்கம்:**

மனிதன் அறிவொளியைப் பெற்ற தொல்பழங்காலத்திலேயே தோன்றியது சமயம். சமயங்கள் மதங்களாக மாறிய காலம் அறியாமையின் வாழ் இருளில் மூழ்கிய காலம். ஆற்றில் வெள்ளப்பெருக்கு வரும்போது கரை உடைந்து ஆறு நாற்புறமும் பாய்ந்தோடி சென்று பெருகுவது போல காலப்போக்கில் சமயங்கள் மதங்களாக மாறின. மக்கள் இனமும் பூசலும் போராட்டமும் நிறைந்த ஒவ்வொரு மதத்தின் பேரால் அறிவின் வாசலை மூடித் தத்தளித்தது. அந்த காலகட்டத்தில் தோன்றியவர்கள் தான் சித்தர்கள். சித்தர்களின் இனம் நீண்ட நெடுங்காலமாக இந்த நிலத்தில் வேறு ஒன்றி விழுது பரப்பி வருகிறது. தமிழ் இலக்கியங்களில் ஒன்று சித்தர் இலக்கியம் ஆகும். சித்தரில் ஒருவரான இடைக்காடர் கூறும் பாடல்கள் வழியாக வாழ்வியல் தத்துவங்களினைப் பற்றி ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரையானது அமைகிறது.

**திறவுச்சொல்:**

ஞான உபதேசம் –மனம் - தவம் - ஏகவெளி - யோகவெளி

**முன்னுரை:**

சித்தர் காலம் என்று கருதப்படும் கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றியவர் இடைக்காட்டுச்சித்தர். இவர் ஞானமார்க்கத்திலேயே பற்றுடையவர். இவர் தம் உள்ளத்தால் கண்டறிந்த உண்மைகளை மக்களுக்கு புரியும்படி எளிய நடையிலே பாடினார். பாமர மக்கள் பாடி மகிழும்படியான சந்தங்களிலே பாடினார். இவருடைய பாடல்கள் பெரும்பாலும் முல்லை நிலத்தைப் பற்றியே கூறுகின்றன. இவரது பாடல்கள் இடையர்களையும், ஆடு, மாடுகளையும் முன்னிறுத்தியே பெரிதும் பாடப்பட்டுள்ளது. நுனிப்புல் மேய்கிற ஆட்டையும் உயிர்பயிர் மேய்கிற மாட்டையும் அறக்கயிற்றால் பிணைத்து அறிவுப் பசியை மாற்ற இடைக்காட்டுச் சித்தர் உண்மையின் ஊது குழலாகிறார், அன்பின் அன்னமாகிறார், குணத்தின் குயிலாகிறார், மனத்தின் மயிலாகிறார்.

சித்தர்கள் உலக ஆசை, மனம், அறிவு, விவேகம்,தூரத்தில் நடப்பவை, முக்காலமும் உணரும் வல்லமை,ஆகாயத்தில் உள்ளவை அனைத்தையும் கண்டுணர்வது போன்றவற்றை அறிந்தவர்களாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சித்தர்களை பதினெண் சித்தர்களாகக் கூறுவர். சித்தர்களின் எண்ணிக்கை பதினெட்டு என்று தொகை படுத்தினாலும் அவர்கள் எண்ணிலடங்கார். சித்து-அறிவு சித்தையுடையவர்கள் சித்தர்கள். நிலைத்திருக்கும் பேரறிவு பெற்றவர்கள் சித்தர்கள். நம் வாழ்க்கையில் உடலும்,உள்ளமுமம்,சீராக இருக்க சித்தர்கள் பலரும் பல்வேறு வாழ்வியல் ரகசியங்களை சொல்லிச் சென்றிருக்கின்றனர். சித்தர்கள் சித்துக்களை எட்டு வகைகளாக கூறுகின்றனர். இதனை அட்டமா சித்திகள் என்று மறுபெயரினை கொண்டும் அழைப்பர். இந்த எட்டு வகையான சித்திகளும் கைகூட பெற்றவர்களை சித்தர்கள் ஆவர். இக்கட்டுரையானது சித்தர்களுள் ஒருவ ரான இடைக்காட்டுச் சித்தரின் பாடல்களின்வழி வாழ்வியலுக்கான தத்துவங்களை ஆராய்வதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

**இடைக்காட்டுச்சித்தர்:**

இடைக்காடர் தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டில் ஓர் இடையராக வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் இவர் பொதிகை மலைச் சாரலில் வழக்கம் போல் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது நவசித்தரில் ஒருவர் வந்து இவரிடம் பால் கேட்டார். அவருக்கு பால் முதலியன கொடுத்தும் உபசரித்ததினால் அவர் ஞான உபதேசம் செய்து விட்ட போனார். ஆனால் இவர் சகல சித்திகளும் அடைந்து சித்தரானார்.

ஒருமுறை நாட்டில் மழை இல்லாமல் பன்னிரண்டு ஆண்டு காலம் பஞ்சம் ஏற்படும் என்பதை இவர் அறிந்து தம் ஆடுகளுக்கு எருக்கிலை மற்றும் ஆவாரம்பூ இலை முதலியன கொடுத்துப் பழக்கி வரகு என்னும் தானியத்தை சேற்றோடு கலக்கி சுவர் வைத்து குடிசை ஒன்றைக் கட்டினார். குடிசையில் தம் ஆடுகள் எருக்கிலை தின்னும் வரகு ஊறலால் சுழற்சியில் தேய்க்க அப்போது உதிரும் சிறியதான தானியத்தைப் புசித்து வாழ்ந்து வந்தார். நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு உயிர்கள் எல்லாம் அழிந்து போயின. இவரும் இவருடைய ஆடுகளும் மட்டும் பிழைத்திருப்பதை அறிந்து நவக்கிரகங்கள் இவரிடம் வந்தனர். அவர்களை இச்சித்தர் வரவேற்று உபசரித்து ஆட்டின் பாலில் வரகைச் சமைத்து கிரக தேவர்களுக்கு விருந்து கொடுத்தார்.

**அடக்கி ஆள வேண்டியவை:**

“இருவினையான மாடுகளை ஏகவிடு கோனே – உன்
அடங்குமன மாடொன்றை யடைக்கிவிடு கோனே” (இ.சிபா.113)

இடைக்காடுதல் என்றால் இடையர்களின் நான்கு வேலைகளின் முடிவான பணி. அதைப் பாடுகின்றார். இருவினை என்னும் மாடுகளை விரட்ட வேண்டும். மனம் என்னும் மாட்டை அடக்க வேண்டும்.

"மனம் என்னும் மாடு அடங்கின்
தாண்டவக் கோனே! முத்தி
வாய்த்த தென்று எண்ணேடா
தாண்டவக் கோனே" (சித்தர் கண்ட விஞ்ஞானம். பக். 69)

மனம் என்பது கட்டுக்கடங்காத ஒரு முரட்டு மாடு. அது நமது கட்டுக்குள் அடங்குமானால் விடுதலை கிடைத்து விட்டது என்று எண்ணிக்கொள்.

"சினம் என்னும் பாம்பிறந்தால்
தாண்டவக் கோனே – யாவும்
சித்தி என்றே நினையேடா
தாண்டவக் கோனே" (சித்தர் கண்ட விஞ்ஞானம். பக். 70)

அந்தப் பாம்பு எது தெரியுமா? அதுதான் சினம்,கோபம்,வெகுளி, ஆத்திரம் என்று சொல்லப்படும் நல்ல பாம்பு அதை நம் உள்ளத்திலேயே வாழ விடக்கூடாது. அதை மாண்டு மடிய செய்து விட வேண்டும். அந்தப் பாம்பு மடிந்தால் தான் நாம் நினைப்பவனெல்லாம் நிறைவேறும்.

ஆசை என்னும் பசுமாட்டின்
தாண்டவக் கோனே!
அண்டம் எல்லாம் கண்டறிவாய்
தாண்டவக்கோனே! (சித்தர் கண்ட விஞ்ஞானம். பக். 70)

ஆசை என்பது அடங்காத பசு. அந்த பசுவின் அடங்காத்தன்னை அழிய வேண்டும். ஆசையை கட்டுக்குள் அடக்கி விட வேண்டும். இதை செய்து விட்டால் இந்த உலகில் உள்ள உண்மைகள் முழுவதையும் கண்டறிய முடியும்.

**தவம் செய்தல்:**

"தொல்லைப் பிறவியின் தொந்தமுற் றறவே
சோம்பலற் றுத்தவஞ் செய்யாக்கால்
எல்லையில் கடவு ளெய்தும் பதமுமக்கு
இல்லையென் றெண்ணுவீர் கோனாரே"

(சித்தர் இலக்கியம் ஆய்வு நூல். ப. 97.) (தாண்டவராயக் கோனார் கூற்று 'பாடல்.4)

பிறவித் தொல்லையின் தொடக்கம் அறிவதற்கு ஒரே வழி தவம் செய்வதே ஆகும். மனிதன் மனித நிலையில் இருந்து உயர்ந்து கடவுளின் நிலையை அடைவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த வழி இடையில்லாத தவமாகும்.

"சீரார் சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாரதி வான்பொருளைப் பஞ்சவுரு வானவொன்றைப்

பேரான விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நேராக எந்நாளும் நெஞ்சிருத்தி வாழ்வேனே “

(சித்தர் இலக்கியம் ஆய்வு நூல். ப. 100) (நாராயணக் கோனார் கூற்று, பாடல், 11)

சிவமாகிய தீக்கொழுந்து அகக்கண் ஒளியாகும். அது தெள்ளிய அமுதநிலை. அது செந்நிறத் தேனாகும். ஐந்து சிவநிலைகளும் அதுவே. எனவே, தவத்தினை மேற்கொண்டு பேரின்பப் பெருவாழ்வு வாழ வேண்டும்.

“மெய்வாய்கண் மூக்குச் செவியெனு மைந்நாட்டை
வீறுஞ் சுவையொளி யூறோசை யாங்கோட்டை
எய்யாம லோட்டினேன் வாட்டினே னாட்டினேன்
ஏக வெளிக்குள்ளே யோக வெளிக்குள்ளே”.

(சித்தர் இலக்கியம் ஆய்வு நூல். ப. 104) (தாண்டவராயக் கோனார் கூற்று, பாடல், 28)

ஐந்து புலன்களாகிய நாட்டிலே ஐம்புல இயக்கமாகிய காட்டை வில் கொண்டு எய்யாமல் ஓட்டி, வாட்டி, ஆட்டிப் படைத்தேன். எல்லாம் யோகமுறையாகிய வெட்ட வெளியிலே நடத்திய செயல், மனம் கொண்டு புரிந்த கருத்தின் காரியமாகும்.

**மும்மலங்கள்:**

“மும்மலம் நீக்கிட முப்பொறிக் குக்கிட்டாத
முப்பாழ் கிடந்ததா மப்பாழைச்
செம்மறி யோட்டிய வேலை யமயத்துஞ்
சிந்தையில் வைப்பீரே கோனாரே “

(சித்தர் இலக்கியம் ஆய்வு நூல். ப. 99) ( தாண்டவராயக் கோனார் கூற்று, பாடல், 9)

மூன்று கனலும் தாண்டிய வெறும் வெளியிலே ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் அழிகிற நிலை உள்ளது. அதை எல்லா நேரத்திலும் ஒடுக்க நிலையிலே நின்று கருத வேண்டும்.

**முடிவுரை:**

இடைக்காடர் மக்களிடையே ஞானமார்க்கத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்ற பற்று உடையவர். அதனாலேயே மனித வாழ்விற்கு பயன்படும் வகையில் பாடல்களினை பாடியுள்ளார். தவம் செய்வதால் ஏற்படும் நன்மைகள், மும்மலங்கள் போன்றவற்றையும் நாம் நம் வாழ்வில் குறைத்துக்கொள்ள வேண்டிய குணங்களையும் அவற்றால் ஏற்ப்படும் நன்மைகளையும் தமது பாடல்கள் வழியாக மனித வாழ்விற்கு எடுத்துரைக்கிறார்.

மன அறிவைவிட உள்ளத்து எழுச்சியின் விரைவே ஆற்றல் வாய்ந்ததாக இருக்கிறது. ஆதலால் தான் இடைக்காட்டுச் சித்தர் தூய மறைப் பொருளை விருப்புற்று பொய் பொருளைத் தூற்றுகிறார்.

**துணைநூற்பட்டியல்:**


1. சாமி. சிதம்பரனார் (சித்தர் கண்ட விஞ்ஞானம் தத்துவம்) மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. டாக்டர். ச. மெய்யப்பன் (சித்தர் பாடல்கள்) மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. மீ. ப. சோமு (சித்தர் இலக்கியம் ஆய்வு நூல்) அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.